# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2320/37 - 2023 පෙබරවාරි මස 21 වැනි අඟහරුවාදා - 2023.02.21

2320/37 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 3/2/3/10/252B.

பஸ்னாகொட நீர்த்தேக்கத்திட்டத்திற்காக கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தின், கம்பஹா மாவட்டத்தில், அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 365/சீ, கரஸ்னாகல தெற்கு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட கரஸ்னாகல எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் அவர்களுக்காக கம்பஹா மாவட்டத்தின் சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட க. ப. வ. இலக்கம் 510674 வட்டார இலக்கம் 02 இன் பத்திர இலக்கம் 01 என காட்டப்பட்டுள்ள 2022.10.17 ஆந் திகதிக்கான வரைபடத்தில் காட்டப்பப்பட்டுள்ள கீழே விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள 04 காணித்துண்டுகளின் எல்லைகள்:

**01. துண்டு இலக்கம்: 1**

காணியின் பெயர்: பலுதன்கொல்ல; விபரம்: தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு, பஸ்னாகொட நீர்த்தேக்கத்திட்டத்திற்காக தேவைப்படுகிறது; விஸ்தீரணம்: 0.0093 ஹெக்டயார்.

**02. துண்டு இலக்கம்: 2**

காணியின் பெயர்: பலுதன்கொல்ல; விபரம்: மயான பூமி; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியவில்லை, அரசு, காணி எடுத்தல் நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்காக; விஸ்தீரணம்: 0.0768 ஹெக்டயார்.

**03. துண்டு இலக்கம்: 3**

காணியின் பெயர்: பலுதன்கொல்ல காடு; விபரம்: தோட்டம், 20 - 30 வயதையுடைய இறப்பர் பயிர் செய்கை காணப்படுகிறது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: இலக்கம் 63/03, நிக்கஹெட்டிகந்த, வெயாங்கொடை எனும் முகவரியில் வசிக்கும் எஸ். ஏ. பி. கருணாரத்ன, காணி எடுத்தல் நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்காக; விஸ்தீரணம்: 0.1346 ஹெக்டயார்.

**04. துண்டு இலக்கம்: 4**

காணியின் பெயர்: பலுதன்கொல்ல காடு; விபரம்: தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: இலக்கம் 63/02, நிக்கஹெட்டி கந்த, வெயாங்கொடை எனும் முகவரியில் வசிக்கும் எஸ். எஸ். எல். கருணாரத்ன, காணி எடுத்தல் நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்காக; விஸ்தீரணம்: 0.0143 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி மு.ப. 09.30 மணிக்கு அத்தனகல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எஸ். பீ. குணவர்தன,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் அதிகாரி,
அத்தனகல்ல.

பிரதேச செயலகம்,
அத்தனகல்ல,
2023, சனவரி 03.

EOG 02 - 239/1

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 3/2/3/10/252B.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தின், கம்பஹா மாவட்டத்தில், அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 364/ஏ, அலவல தெற்கு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட அலவல எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் அவர்களுக்காக கம்பஹா மாவட்டத்தின் சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட க. ப. வ. இலக்கம் 510648 வட்டார இலக்கம் 01 இன் பத்திர இலக்கம் 01 என காட்டப்பட்டுள்ள 2022.10.13 ஆந் திகதிக்கான வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 0.3720 ஹெக்டயார் விஸ்தீரணமுடை கீழே விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள 02 காணித்துண்டுகளின் எல்லைகள்

**01. துண்டு இலக்கம்: 1**

காணியின் பெயர்: தம்முலஹேன; விபரம்: தென்னந்தோட்டம், நிரந்தரமான ஒரு கட்டிடம் மற்றும் 15 - 20 வயதையுடைய தென்னைப் பயிர்ச் செய்கை காணப்படுகிறது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு; விஸ்தீரணம்: 0.2164 ஹெக்டயார்.

**02. துண்டு இலக்கம்: 2**

காணியின் பெயர்: பஸ்னாகொட ஓயா; விபரம்: பஸ்னாகொட ஓயா; உரிமை கோருபவர்: அரசு, பஸ்னாகொட நீர்த்தேக்கத்திட்டத்திற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.1556 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி மு.ப. 09.30 மணிக்கு அத்தனகல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எஸ். பீ. குணவர்தன,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் அதிகாரி,
அத்தனகல்ல.

பிரதேச செயலகம்,
அத்தனகல்ல,
2023, சனவரி 03.

EOG 02 - 239/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.